கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : செல்வி.பவித்ரா. G, எல்.எல்.எம்.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08 ஆம் நாள் புதன்கிழமை

**I.A.No.9/2026 in OS 154/2013**

மாடத்தி ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1. மீன்ராஜ்

2. தனராஜ்

3. வட்டாட்சியர், சங்கரன்கோவில்

4. ஆணையாளர் நகராட்சி, சங்கரன்கோவில்

5. தனிவட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலத்துறை

6. ஏசுராஜா .... பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள்

7.மாடத்தி ... உத்தேச 7 ம் பிரதிவாதி/7 ம் எதிர்மனுதாரர்

இம்மனு இறுதி விசாரணைக்காக 29.06.2026 அன்று வந்தபோது, மனுதாரர் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.ராஜாசிங் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 3, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.N.அருணாச்சலம் அவர்கள் ஆஜராகியும், 7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.பாலாஜி அவர்கள் ஆஜராகியும், மொழிந்த

வாதங்களைக் கேட்டும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 151ன் கீழ், அசல் வழக்கின் விசாரணையை மீள்திறப்பு (Re – open) செய்து உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் / வாதி தரப்பு மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர் தரப்பில், மனுதாரர் விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் வேண்டி அசல் வழக்கைத் தாக்கல் செய்திருப்பதாகவும், பிராது தபசில் சொத்து 18.07.1965ம் ஆண்டு திருநெல்வேலி ஆதிதிராவிட நில ஆர்ஜித தாசில்தார் அவர்களால் தன் தகப்பனார் சங்கரன்பெயருக்கு STC(A) 2066/1964 உத்தரவின் கீழ் வழங்கப்பட்ட 5 செண்ட் விஸ்தீரணமுள்ள வீட்டு மனை என்றும், மேற்படி ஒப்புடைப்பு பெற்ற தினம் முதல் தபசில் சொத்தை ஏகமாய் அனுபவம் செய்து பின்னர் அதில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும், மேற்படி வாதியின் தகப்பனார் 13.11.2002ல் இறந்துவிட்ட பிறகு வாதியே தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், தன் தகப்பனார் இறப்பதற்கு பல காலம் முன்பே வாதியின் தாயார் இறந்துவிட்டார் என்றும், ஆகவே தன் தகப்பனார் தன்னையும் தன் சகோதரியான மாடத்தி மற்றும் சின்னத்தாய் ஆகியோரை மட்டுமே வாரீசுகளாக விட்டுச்சென்றார் என்றும், தன் தகப்பனார் இறந்த பின்பு தன் சகோதரிகள் தபசில் செத்தைப் பொறுத்து தனக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்டார்கள் என்றும், அசல் வழக்கில் தனது சகோதரி சின்னத்தாய் வாதி தரப்பு சாட்சி 2 (வா.சா.2) ஆக சாட்சியம் அளித்து மேற்படி

வாய்மொழி விடுதலையை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி மற்றொரு சகோதரி மாடத்தி என்பவர் வாதி தரப்பு சாட்சியாக ஆஜராகி முதல்நிலை சாட்சியம் மட்டுமே அளித்துள்ள நிலையில் உடல் நிலை குறைபாடு காரணமாக குறுக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதால் மேற்படியார் சாட்சியம் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி பிராது தபசில் சொத்தைப் பொறுத்து தான் விளம்புகைப் பரிகாரம் கோரியுள்ள நிலையில் தனது சகோதரியான மாடத்தியைக் கட்சி சேர்க்கவேண்டியது அவசியம் என்றும், தற்போது அசல் வழக்கில் சாட்சியங்கள் நிறைவுற்று வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி வழக்கின் விசாரணையை மீள்திறப்பு செய்து மேற்படி 7ம் எதிர்மனுதாரரை பிரதிவாதியாகக் கட்சி சேர்த்து வழக்கை நடத்த வேண்டியுள்ள காரணத்தால் இம்மனுவைத் தாக்கல் செய்வதாகவும், ஆகவே இவ்வழக்கில் 7ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கின் 7ம் பிரதிவாதியாகக் கட்சி சேர்த்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், இல்லாவிடில், இந்த வழக்கில் தன் தரப்பு நியாயம் பாதிக்கப்பட்டு விடுவதோடு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. 1, 2, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–**

அசல் வழக்கில் உபய மனுதாரர்களின் தரப்பு விசாரணைகள் முடிவுற்று வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்ற பின்பும், இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதி தரப்பு சாட்சியையும், வாதியையும் குறுக்கு விசாரணை செய்த போதே இந்த நிர் வாதியின் உடன்பிறந்தவர்களைத் தரப்பினர்களாகக் கட்சி சேர்க்காத தோசத்தால் இவ்வழக்கு பீடிக்கப்பட்டுள்ளது என கேள்வி கேட்டுள்ள நிலையில் தற்போது பின்னினைவாகவும், காலப்பிற்பாடாகவும், 7ம் மனுதாரரை மட்டும் கட்சி சேர்க்கக் கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் வாதியின் மற்றொரு சகோதரியான சின்னத்தாய் என்பவரைப் பற்றி வாதி அவரது பிராது 2வது பாராவில் கூறும் போது வாதியின் தந்தைக்கு 7ம்

எதிர்மனுதாரரும், மனுதாரும் மட்டுமே சட்டப்படியான வாரீசு எனவும், கூறிவிட்டு தற்போது சின்னத்தாய் என்பவரும், வாரிசு எனவும், அவர் வாதிக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்டார் எனக் கூறி இந்நீதிமன்றத்தையே ஏமாற்றி கட்சி செய்து வருகிறார் என்றும், மேலும் இந்தநிர் வழக்கிலும், அவசியக் கட்சி என்றும், மேற்படியாரைக் கட்சி சேர்க்காமல் இந்தநிர் மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவும் இவ்வழக்கும், அவசியக் கட்சியை சேர்க்காத தோஷத்தினால் பீடிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்காகவே மனுதாரின் இம்மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியதாயிருக்கிறது என்றும், இல்லாவிடில இந்தநிர் எதிர்மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>4. 3, 5 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

பிரதான வழக்கானது உபயமனுதாரர்களின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டு வாதுரைக்காக இருந்து வந்த நிலையில் தற்போது மனுதாரர் 7 ம் எதிர்மனுதாரரை 7 ம் பிரதிவாதியாக பிரதான வழக்கில் கட்சியாகச் சேர்க்க வேண்டி மிகவும் காலப்பிற்பாடாக மனுத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மனுதாரருக்கு பிரதான வழக்கில் நல்ல கட்சி கிடையாது என்பதினைக் கருதியே வழக்கினை வீண் காலதாமதப்படுத்திட வேண்டும் என்ற கெட்ட நோக்கிலேயே இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் இந்த 5 ம் எதிர்மனுதாரருக்கு வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும் இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி மனுவினை 5 ம் எதிர்மனுதாரின் செலவுத்தொகை சகிதம் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>5. 7 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

பிராது தபசில் சொத்து 18.07.1965 ம் ஆண்டு திருநெல்வேலி ஆதிதிராவிட நில ஆர்ஜித தாசில்தார் அவர்களால் தன் தகப்பனார் சங்கரன் பெயருக்கு

STC(A)2066/1964 உத்தரவின் கீழ் வழங்கப்பட்ட 5 சென்ட் விஸ்தீரணமுள்ள வீட்டு மனை என்றும், மேற்படி ஒப்படைப்பு பெற்ற தினம் முதல் தபசில் சொத்தை அவர் ஏகமாய் அனுபவம் செய்து பின்னர் அதில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும், மேற்படி எங்கள் தகப்பனார் 13.11.2002 ல் இறந்துவிட்ட பிறகு மனுதாரரே தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், தன் தகப்பனார் தன்னையும் தன் சகோதரிகளான மனுதாரர் மற்றும் சின்னத்தாய் ஆகியோரை மட்டுமே வாரிசுகளாக விட்டுச்சென்றார் என்றும், தன் தகப்பனார் இறந்த பின்பு தானும் தனது சகோதரி சின்னத்தாயும் மேற்படி தபசில் சொத்தை பொறுத்து மனுதாரருக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்டதாகவும், மேற்படி காலமுதல் மனுதாரரே தபசில் சொத்தில் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேற்படி பிராது தபசில் சொத்தைப் பொறுத்து தான் மனுதாரருக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்ட நிலையில் தன்னை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவேண்டியது அவசியம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி இம்மனு அனுமதிக்கக்கூடியதா என்பதேயாகும்.

7. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>8. தீர்வு</u> :-

8.1. மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததில், அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் பிராது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் வலியுறுத்து ஏவுகட்டளை பரிகாரங்கள் கோரி

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் வாதி தரப்பு வாதுரை கேட்பதற்காக வாய்தா போடப்பட்ட நிலையில், வாதியின் சகோதரியான மாடத்தி என்பவர் இவ்வழக்கில் அவசியத்தரப்பினர் என்று தெரிவித்து அவரை அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க அனுமதி கோரி வ.வி.எண்.10/2026 மனுவையும், அவ்வாறு கட்சி சேர்க்கும் வகைக்கு அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவையும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது.

8.2. மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர் தரப்பில், மனுதாரர் விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் வேண்டி அசல் வழக்கைத் தாக்கல் செய்திருப்பதாகவும், பிராது தபசில் சொத்து 18.07.1965ம் ஆண்டு திருநெல்வேலி ஆதிதிராவிட நில ஆர்ஜித தாசில்தார் அவர்களால் தன் தகப்பனார் சங்கரன்பெயருக்கு STC(A) 2066/1964 உத்தரவின் கீழ் வழங்கப்பட்ட 5 செண்ட் விஸ்தீரணமுள்ள வீட்டு மனை என்றும், மேற்படி ஒப்புடைப்பு பெற்ற தினம் முதல் தபசில் சொத்தை ஏகமாய் அனுபவம் செய்து பின்னர் அதில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும், மேற்படி வாதியின் தகப்பனார் 13.11.2002ல் இறந்துவிட்ட பிறகு வாதியே தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், தன் தகப்பனார் இறப்பதற்கு பல காலம் முன்பே வாதியின் தாயார் இறந்துவிட்டார் என்றும், ஆகவே தன் தகப்பனார் தன்னையும் தன் சகோதரியான மாடத்தி மற்றும் சின்னத்தாய் ஆகியோரை மட்டுமே வாரீசுகளாக விட்டுச்சென்றார் என்றும், தன் தகப்பனார் இறந்த பின்பு தன் சகோதரிகள் தபசில் செத்தைப் பொறுத்து தனக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்டார்கள் என்றும், அசல் வழக்கில் தனது சகோதரி சின்னத்தாய் வாதி தரப்பு சாட்சி 2 (வா.சா.2) ஆக சாட்சியம் அளித்து மேற்படி வாய்மொழி விடுதலையை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி மற்றொரு சகோதரி

மாடத்தி என்பவர் வாதி தரப்பு சாட்சியாக ஆஜராகி முதல்நிலை சாட்சியம் மட்டுமே அளித்துள்ள நிலையில் உடல் நிலை குறைபாடு காரணமாக குறுக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதால் மேற்படியார் சாட்சியம் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி பிராது தபசில் சொத்தைப் பொறுத்து தான் விளம்புகைப் பரிகாரம் கோரியுள்ள நிலையில் தனது சகோதரியான மாடத்தியைக் கட்சி சேர்க்கவேண்டியது அவசியம் என்றும், தற்போது அசல் வழக்கில் சாட்சியங்கள் நிறைவுற்று வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி வழக்கின் விசாரணையை மீள்திறப்பு செய்து மேற்படி 7ம் எதிர்மனுதாரரை பிரதிவாதியாகக் கட்சி சேர்த்து வழக்கை நடத்த வேண்டியுள்ள காரணத்தால் இம்மனுவைத் தாக்கல் செய்வதாகவும், ஆகவே இவ்வழக்கில் 7ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கின் 7ம் பிரதிவாதியாகக் கட்சி சேர்த்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், இல்லாவிடில், இந்த வழக்கில் தன் தரப்பு நியாயம் பாதிக்கப்பட்டு விடுவதோடு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

8.3. 1, 2, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், அசல் வழக்கில் உபய மனுதாரர்களின் தரப்பு விசாரணைகள் முடிவுற்று வாதுரைக்காக பல வாய்தாக்களைப் பெற்ற பின்பும், இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதி தரப்பு சாட்சியையும், வாதியையும் குறுக்கு விசாரணை செய்த போதே இந்த நிர் வாதியின் உடன்பிறந்தவர்களைத் தரப்பினர்களாகக் கட்சி சேர்க்காத தோசத்தால் இவ்வழக்கு பீடிக்கப்பட்டுள்ளது என கேள்வி கேட்டுள்ள நிலையில் தற்போது பின்னினைவாகவும், காலப்பிற்பாடாகவும், 7ம் மனுதாரரை மட்டும் கட்சி சேர்க்கக் கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் வாதியின் மற்றொரு சகோதரியான சின்னத்தாய் என்பவரைப் பற்றி வாதி அவரது பிராது 2வது பாராவில் கூறும் போது வாதியின் தந்தைக்கு 7ம் எதிர்மனுதாரரும்,

மனுதாரும் மட்டுமே சட்டப்படியான வாரீசு எனவும், கூறிவிட்டு தற்போது சின்னத்தாய் என்பவரும், வாரிசு எனவும், அவர் வாதிக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்டார் எனக் கூறி இந்நீதிமன்றத்தையே ஏமாற்றி கட்சி செய்து வருகிறார் என்றும், மேலும் இந்தநிர் வழக்கிலும், அவசியக் கட்சி என்றும், மேற்படியாரைக் கட்சி சேர்க்காமல் இந்தநிர் மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவும் இவ்வழக்கும், அவசியக் கட்சியை சேர்க்காத தோஷத்தினால் பீடிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்காகவே மனுதாரின் இம்மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியதாயிருக்கிறது என்றும், இல்லாவிடில இந்தநிர் எதிர்மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.4. 3, 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், பிரதான வழக்கானது உபயமனுதாரர்களின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டு வாதுரைக்காக இருந்து வந்த நிலையில் தற்போது மனுதாரர் 7ம் எதிர்மனுதாரரை 7ம் பிரதிவாதியாக பிரதான வழக்கில் கட்சியாகச் சேர்க்க வேண்டி மிகவும் காலப்பிற்பாடாக மனுத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மனுதாரருக்கு பிரதான வழக்கில் நல்ல கட்சி கிடையாது என்பதினைக் கருதியே வழக்கினை வீண் காலதாமதப்படுத்திட வேண்டும் என்ற கெட்ட நோக்கிலேயே இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் இந்த 5ம் எதிர்மனுதாரருக்கு வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும் இந்த மனுவினைத் தாக்கல் செய்துள்ளதால் மேற்படி மனுவினை 5ம் எதிர்மனுதாரின் செலவுத்தொகை சகிதம் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.5. 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், பிராது தபசில் சொத்து 18.07.1965ம் ஆண்டு திருநெல்வேலி ஆதிதிராவிட நில ஆர்ஜித தாசில்தார்

அவர்களால் தன் தகப்பனார் சங்கரன் பெயருக்கு STC(A)2066/1964 உத்தரவின் கீழ் வழங்கப்பட்ட 5 சென்ட் விஸ்தீரணமுள்ள வீட்டு மனை என்றும், மேற்படி ஒப்படைப்பு பெற்ற தினம் முதல் தபசில் சொத்தை அவர் ஏகமாய் அனுபவம் செய்து பின்னர் அதில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும், மேற்படி எங்கள் தகப்பனார் 13.11.2002 ல் இறந்துவிட்ட பிறகு மனுதாரரே தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், தன் தகப்பனார் தன்னையும் தன் சகோதரிகளான மனுதாரர் மற்றும் சின்னத்தாய் ஆகியோரை மட்டுமே வாரிசுகளாக விட்டுச்சென்றார் என்றும், தன் தகப்பனார் இறந்த பின்பு தானும் தனது சகோதரி சின்னத்தாயும் மேற்படி தபசில் சொத்தை பொறுத்து மனுதாரருக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்டதாகவும், மேற்படி காலமுதல் மனுதாரரே தபசில் சொத்தில் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேற்படி பிராது தபசில் சொத்தைப் பொறுத்து தான் மனுதாரருக்கு வாய்மொழி விடுதலை கொடுத்துவிட்ட நிலையில் தன்னை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவேண்டியது அவசியம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8.6. இருதரப்பு வாதங்கள் மனு மற்றும் எதிருரை சங்கதிகளைப் பரிசீலித்ததில், அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வாதியின் சகோதரியான மாடத்தி என்பவர் இவ்வழக்கில் அவசியத்தரப்பினர் என்று தெரிவித்து அவரை அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியாகக் கட்சி சேர்க்க அனுமதி கோரி வ.வி.எண்.10/2026 மனுவையும், அவ்வகைக்கு அசல் வழக்கின் விசாரணையை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவையும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்தால்தான் வ.வி.எண்.10/2026 மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரம் குறித்து இறுதியாகத் தீர்மானிக்க முடியும் என்று

இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கை மறுதிறவு செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கஷ்ட நஷ்டத்தைக் கருத்தில் கொண்டு, மனுதாரரின் இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வரும் 14.07.2026 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும்பட்சத்தில், இம்மனு தானாகத் தள்ளுபடி ஆகிவிடுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மீள் அழைப்பு நாள். 15.07.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 08ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.07.08 17:11:11 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

__இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்__ :- - இல்லை -

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.07.08 17:11:20 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

கூ.மா.உ. நீதிமன்றம்,

சங்கரன்கோவில்,

I.A.No.9/2026 in

O.S.No.154/2013

உத்தரவு (Draft / Fair)

நாள் : 08.07.2026